# மனிதம் மலரட்டும்… – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/09/23/%E0%AE%AE%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%B2%E0%AE%B0%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D/

September 23, 2024

முயல்களை விட… ஆமைகளே அதிகம் சொல்லமுடியும் பாதைகளைப் பற்றி.!
– கலீல் ஜிப்ரான்

எழுத தொடங்குங்கள் உங்கள் எண்ணங்கள் எவ்வாறு என்று தெரிந்து விடும்.
– இனிதி

பறவையின் பார்வையில் மனிதர்கள் எல்லாம் ஊனமுற்றவர்களே!
– Unknown

துன்பத்தில் வராத உறவை இன்பத்தில் சேர்க்காதீர்கள்
– Unknown

பெற்றவளும் பிறந்தவளும் கதை பேசுவது போல் கதைக்க எவராலும் முடியுமோ?
– நான்

அமைதியைத் தோண்டிப் பார்த்தேன் சப்தங்களின் எலும்புக் கூடுகள்
– கவிக்கோ அப்துல்ரகுமான்

கண்ணீரை ஒரு போதும், அடக்கி வைக்காதீர்கள்…!
மனம் வலிக்கும் போதெல்லாம், மனம் விட்டு அழுது விடுங்கள். யாருக்கும் தெரியாமல்…!!
தெளிந்த நீரோடையாய் மனம் தெளிவாகிவிடும்…!!!
– sasi_duraisamy

அருவருப்பில்லாமல்… ஆசன வாய் கழுவி விடுகிறாள்..
மனநலம் பாதித்த முப்பது வயது ஆண் குழந்தைக்கு…!
தாயை தவிர, யாரால் முடியும்..?
– sasi_duraisamy

பெரிய ஆசைகள் ஒன்றுமில்லை. யார் மேலும் பட்டுவிடாமல் இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு இன்னும் கொஞ்ச தூரம் போகவேண்டும். அவ்வளவுதான்.
– எழுத்தாளர். கல்யாண்ஜி (எ) வண்ணதாசன்

அத்தனை கோபங்களுக்குப் பின் எனக்கிருக்கும் கடைசிச் சமாதானம்.
”பாவம் நீயும் என்னதான் செய்வாய்?”
– Gobi-editizz

சுதந்திரம் கிடைத்ததால் என்ன கிடைத்தது?
ஒருநாள் விடுமுறை கிடைத்தது ஏமாற்றங்களின் கசப்பை ஏமாற்ற மிட்டாய் கிடைத்தது!”
– கவிக்கோ அப்துல்ரகுமான்

நாட்களில் இல்லை நன்மையும் தீமையும் நீ நல்லது செய்தால் அது நல்ல நாள் கெட்டது செய்தால் அது கெட்ட நாள்
– கவிக்கோ அப்துல்ரகுமான்

பெண்ணாக வாழ்வது எவ்வளவு கடினம் அதுவும் துணையின்றி வாழ்வது”ஒற்றை பனை மரத்திற்கு பேய் கதை சூட்டுபவர்களுக்கு மத்தியில் மிகவும் கடினம் தான் “- CUTE SURYA

கடவுள் சிரித்தார்… மனிதர்களைப் பார்த்து…!பைத்தியங்களை கடவுளாக கும்பிடும்… நிஜப் பைத்தியங்கள்..!!- sasi_duraisamy